வறக்காபொல பிரதேச சபை

<u>கேகாலை மாவட்டம்</u>

## 1. <u>நிதிக்கூற்றுக்கள்</u>

### 1.1 <u>நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்</u>

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஜுனி 30 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 <u>முனைப்பழியுள்ள அபிப்பிராயம்</u>

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 <u>நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்</u>

#### 1.3.1 <u>கணக்கீட்டுக் குறைபாடுகள்</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) கடந்த வருடம் அவதானிக்கப்பட்ட கீழ் வரும் குறைபாடுகள் சரி செய்யப்பட்டிருக்கவில்லை.

(i) 2015 வருடம் இறுதியில் காணப்பட்ட ரூபா.46,350 வான கொம்போஸ்ட் பசளை இருப்பு இறுதித் இருப்பின் கீழ் கணக்கீடு செய்யப்படாதன் காரணமாக சொத்துக்களின் பெறுமதி குறைந்திருந்தது.

(ii) நிலையான சொத்துப் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டிருந்த 06 ஏக்கர் 14 பேர்ச்சஸ் 16 காணிப் பகுதிகளின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் 03 வருமான விடயம் தொடர்பாக கிடைக்கப் பெற்ற ரூபா. 641,230 முற்பணமாக கணக்கீடு செய்யப்பட்டதனால் வருடத்தின் வருமானம் குறைவாகவும் வருட முடிவில் பொறுப்பு அதிகரித்தும் காணப்பட்டது

(இ) 2016 திசெம்பர் 31 திகதி முடிவுற்ற 453 வேலைகளின் பெறுமதி ரூபா.111,839,912 மூலதன ஒதுக்கீட்டின் கீழ் கணக்கீடு செய்யப்படாததனால் வருடத்தின் மூலதன பெறுவனவு மற்றும் செலவு அப் பெறுமதியினால் குறைவாக காட்டுகின்றது.

(ஈ) 2016 திசெம்பர் 31 திகதிக்கு வேலை தொடர்பாக ரூபா. 42,530,107 பெற வேண்டியும் கொடுக்க வேண்டியும் இருந்நது, ஆயினும் அப் பெறுமதி கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(உ) சபைக் குரிய சுகாதார கட்டிட நிர்மானிப்பதற்கும் மற்றும் பெகோ இயந்திரம் கொள்வனவு செய்வதற்காகவும் தேசிய கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்ட கடன் தொடர்பாக கொடுப்பனவு செய்ய வேண்டிய மீகுதி ரூபா.17,799,331 ஆக இருந்தும் நிதிக் கூற்றுக்களில் அம் மீகுதி ரூபா.12,216,324 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டிற் குரிய பொருள் கணப்பீட்டுக் குழு பரிந்துரைப் படி பயன்படுத்த முடியாத பொருட்களை ஏல விற்பனை மூலம் விற்பனை செய்து கிடைத்த ரூபா. 5,600 வினை அதற்குரிய பொருட்கள் தொடர்பான மூலதன சொத்துக்களை கண்டறிந்து குறிப்பிட்ட சொத்துக் கணக்குகளிலும் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றின் பிரகாரம் 13 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளின் கூட்டு மொத்தம் ரூபா. 155,830,743 ஆவதுடன் அதற்குரிய உபயோகப் பதிவேடுகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டு மொத்தம் ரூபா. 191,066,808 ஆக இருப்பதுடன் ரூபா. 35,236,065 வேறுபாடாக இருந்தது.

### 1.3.3 பெற வேண்டிய கொடுக்க வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன

(அ) 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் ஒரு வருடத்திற்கும் மேலான கடன்பட்டோர் கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா. 14,114,882 ஆகும்.

(ஆ) 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் ஒரு வருடத்திற்கும் மேலான கடன்கொடுத்தோர் கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா. 19,791,172 ஆகும்.

1.3.4 <u>சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கு இணங்காமை</u>

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மாணங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1987 ஆம் வருட 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158(1) பிரிவு. | மதீப்பீட்டு வரி மற்றும் காணி வரி செலுத்தாத போது சொத்துக்களைப் பறிமுதல் செய்து விற்பனை செய்வதன் மூலம் பணம் அறவிட வேண்டியிருந்தும் 05 மதிப்பீட்டு வரிப் பிரிவுகளில் மதிப்பீட்டு வரி அலகு 7,170 இல் 2016 திகம்பர் 31 ஆம் திகதியிற்கு காணப்பட்ட நிலுவை வரிப்பணம் ரூபா. 8,936,095 வினை அறவிட நடவடிக்கை மேற் கொண்டிருக்கவில்லை. |
| (ஆ) 1988 பிரதேச சபை (நிதி 2011 மற்றும் நிர்வாக) விதிகள் 33 | கொடுப்பானவுத் தவறுகை செய்யும் நபர்கள் தொடர்பான பட்டியல் மற்றும் சொத்துத் தடை செய்வதற்கான ஆணைப்பத்திரம் ஒவ்வொரு காலாண்டு முடிவிலும் தயாரித்துதவிசாளரின/ பொறுப்பானவரின் கையொப்பத்திற்கு சமர்ப்பித்திருக்வில்லை. |

| | |
|---|---|
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிக்கோவை | |
| (i) நிதி.கோ.139 | வவுச்சரின் மீது “ கொடுப்பனவு செய்யப்பட்ட” என்ற முத்திரை வைக்காது மொத்தம் ரூபா.167,600 பெறுமதியான 4 வவுச்சாகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) நிதி.கோ.396 (உ) | ரூபா. 26,830 வழங்கப்பட்டு ஆயினும் கொடுப்பனவிற்குக் சமர்ப்பிக்கப்படாத 15 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. |
| (iii) நிதி.கோ.571(2) | 2 வருடம் கடந்த வைப்புக்கள் ரூபா. 750,155 தொடர்பாக நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. |
| (ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை xxiv அத்தியாயம் 1.6 மற்றும் 4 ஆம் பிரிவு | இடம் மாற்றம் சென்ற 04 ஊழியாகள், 03 ஓய்வு பெற்றுச் சென்ற ஊழியர்கள், 04 வேலையினை விட்டுச் சென்ற ஊழியர்கள் மற்றும் அறவிடாததற்கு காரணம் ஏதம் இல்லாத ஒருவர் என்று 12 ஊழியர்களிடமிருந்து 1998 ஆம் வருடத்திலிருந்து 2015 வரையிலான காலப்பகுதியினுல் அறவிட வேண்டிய ரூபா. 279,440 ஊழியர் கடன் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (உ) பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சரவை செயளாலரின் 2014 திசம்பர் 29 ஆம் திகதி 25/2014 இன் அரச நிர்வாக சுற்றுநிரூபத்தின் 2 ஆவது பந்தி | 2014 ஒக்டோபர் 24 ஆம் திகதி தொடர்ந்து 180 நாட்கள் திருப்த்திகரமான சேவைக் காலத்தினை பூர்த்தி செய்திருந்த ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டியிருந்தும் 2014 ஜனவரி 01 ஆம் திகதியிலிருந்து 2014 ஒக்டோபர் 24 ஆம் திகதிக்கு ஒரு நாளாவது சேவையில் இருக்காத இரண்டு ஊழியர்கள் மற்றும் 20 நாட்கள் மாத்திரமே வேலை செய்திருந்த கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா. 23,527,420 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா. 10,422,545 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா. 13,104,875 அதிகரிப்பினைக் காண்பித்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகள் ரூபா. 13,104,875 தொகை அதிகரிப்புக்கு 04 வருமான விடயங்களின் அதிகரிப்பும் 04 செலவின விடயங்களில் குறைவும் பிரமானமாகத் தாக்கமளித்திருந்தன.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

(அ) மீளாய்வாண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | | | | | 2016.12.31 இல் நிலுவை | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | 2016.01.01 இல் நிலுவை | 2016.12.31 இல் நிலுவையில் அறவீடு | 2016 ஆம் ஆண்டில் பற்றுச்சீட்டிடல் | ஆண்டின் பற்றுச்சீட்டிடல்களில் அறவீடு | 2016.01.01 இல் காணப்பட்ட மீதி | ஆண்டின் பற்றுச்சீட்டில்களில் நிலுவை | மொத்த நிலுவை |
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| i | ஆதனவரியும் வரியும் | 9,054 | 3,108 | 6,377 | 4,152 | 5,946 | 2,225 | 8,171 |
| ii | வாடகை | 828 | 828 | 4,087 | 3,152 | - | 936 | 936 |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணம் | - | - | - | - | - | - | - |
| iv | ஏனைய வருமானம் | 22,751 | 18,613 | 75,844 | 47,661 | 4,138 | 28,183 | 32,321 |
| | மொத்தம் | 32,633 | 22,549 | 86,308 | 54,965 | 10,084 | 31,344 | 41,428 |

2.3.2 <u>மதிப்பீட்டு வரி</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 05 வருடத்திற்கு ஒரு முறை மதிப்பீட்டு வரி மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்தும் 2008 வருடத்தின் மதிப்பீட்டின் அடிப்படையில் மீளாய்வாண்டிலும் மதிப்பீட்டு வரி அறவிடப்படுகின்றது.

(ஆ) காலத்திற்கு ஏற்ப சபை அதிகார எல்லையினுல் இருக்கும் அபிவிருத்தி பிரதேசங்களைக் கண்டறிந்து சரியான முறையில் வர்த்தமானியில் பிரசுரித்து வரி அறவிடுவதற்கு நடவடிக்கை மேற் கொண்டிருக்கவில்லை.

(இ) வரக்காபொல பிரதேச சபை அதிகார எல்லைக்குள் காணி வரி 559 அலகுகளிலிருந்து 2016 திசெம்பர் 31 ஆம் திகதியிற்கு ரூபா.430,430 நிலுவை மீகுதி காணப்படுவதுடன் அவற்றில் ரூபா. 393,474 ஒரு வருடத்தினை விட பழைய மீதியாகும்.

2.3.3 <u>களியாட்ட வரி</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது.

(அ) களியாட்ட வரி சட்டத்தின் 2 ஆவது பந்தியின் (1) உப பந்தியில் வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின் படி காட்சிகள் தொடர்பாக வழங்கப்படுகின்ற நுழைவுச் சீட்டுகளிலிருந்து நூற்றுக்கு 25 வீதம் மற்றும் திரையரங்கு தொடர்பாக வழங்கப்படுகின்ற நுழைவுச் சீட்டுகளிலிருந்து நூற்றுக்கு 7.5 வீதம் களியாட்ட வரி அறவிடுவதற்கு 2015 ஜுலி 28 ஆம் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தில் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அதன் படி சினிமா திரையரங்குகளில் பிரவேசப் பத்திரம் தொடர்பாக நாளாந்த அறிக்கை வருமானப் பரிசோதகர்களின் மூலம் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்தும், அதன் படி நடவடிக்கை மேற் கொள்ளாததுடன் 2016 நவம்பர் 10 ஆம் திகதி ஆகும் போது 2 சினிமாத் திரையரங்குகளில் இருந்து கிடைக்க வேண்டிய களியாாட்ட வரி ரூபா. 178,201 அறவிடப்பட்டிருக்கவும் இல்லை.

(ஆ) சபையினால் முத்திரை வைக்கப்பட்ட பிரவேசப் பத்திரங்களை மாத்திரம் சினிமாத் திரையரங்குகளில் வழங்க வேண்டியதுடன் அதன் படி பிரவேசப் பத்திரங்கள் தொடர்பாக நூற்றுக்கு 7.5 வீத களியாட்ட வரி அறவிடுவதற்கு பதிலாக சினிமா திரையரங்கு உரிமையாளரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நுழைவுச் சீட்டு விநியோகம் தொடர்பான விபரத்தின் படி அறவிடப்பட்ட நூற்றுக்கு 7.5 வீத மொத்த களியாட்ட வரி வருமானம் சபைக்கு கிடைக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்தியிருக்கவில்லை.

2.3.4 <u>அனுமதிப்பத்திரக் கட்டணம்</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது.

(அ) ஒவ்வொறு வருட ஆரம்பத்திலும் சபை அதிகார எல்லையினுல் ஆய்வு மேற் கொண்டு 1987 ஆம் வருட 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 156(1) பந்தியின் படி தொழில் பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வியாபார வரி, விற்பனை அனுமதிப் பத்திரம் தொடர்பான விண்ணப்பங்கள் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டியிருந்தும் அதன் படி நடவடிக்கை மேற் கொள்ளாததுடன் குறிப்பிட்ட வருடம் தொடர்பாக 629 விண்ணப்பத்திரம் கிடைக்கப் பெற்றிருந்தும் 402 அனுமதிப்பத்திரம் மட்டுமே வழங்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் சூழல் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்ட 09 நிறுவனங்கள் வியாபார அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொண்டிருக்கவில்லை.

(ஈ) சூழல் அனுமதிப் பத்திரம் இல்லாது நடாத்திச் செல்ல முடியாத 8 வியாபாரம் தொடர்பாக வியாபார அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

(உ) சுற்றுலா சபை சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஹோட்டல்கள் கடந்த வருட வருமானத்தில் நூற்றுக்கு 01 வீத வரியினை செலுத்த வேண்டுமாயினும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை வழங்காது அவற்றினால் சமர்ப்பிக்கப்பட்ட கிடைப்பனவுகள் தொடர்பான அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு வரி அறவிடப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக அதிகார எல்லையினுல் காணப்படுகின்ற சுற்றுலா சபையின் அனுமதி பெற்ற ஹோட்டல்களின் எண்ணிக்கையினை கண்டறிய வருடாந்த ஆய்வு மேற் கொண்டிருக்கவில்லை.

2.3.5 <u>வேறு வருமானம்</u>

(அ) <u>கழிவு வரி</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது.

(i) அதிகார எல்லைக்குள் கழிவு வரி அறவிடக் கூடிய தொழில்கள் மற்றும் வியாபாரம் தொடர்பாக ஆய்வு மேற் கொண்டு கழிவு வரி வருமானத்தினை அதிகரித்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(ii) கழிவு வரி அறவிடப்படுகின்ற 04 நிறுவனங்களினால் 2016 நவம்பர் ஆகும் போதும் ரூபா. 186,000 நிலுவை இருந்ததுடன் நிலுவைக் காலம் 12 மாதம் முதல் 38 மாதம் வரை ஆக இருந்தது.

(ஆ) <u>நிலுவை கடை வாடகை</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது.

(i) சபைக்குரிய கடை வாடகை கொடுப்பனவுகள் தாமதம் காணப்படுவதுடன் பண்றி இறைச்சிக் கடை தொடர்பாக 2016 ஏப்ரல் முதல் நவம்பர் வரை வாடகை மற்றும் தண்டம் ரூபா. 67,816 அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) 2016 செப்டெம்பர் 03 ஆம் திகதி வரை மத்திய வியாபாரத் தொகுதி பொது நீர் விநியோகம் தொடர்பாக ரூபா. 21,842 நீர்க் கட்டணம் நிலுவையாக இருந்ததுடன் இறைச்சிக் கடை, மீன் கடை மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் போன்றவை தொடர்பாக வேறான நீர் விநியோகம் வழங்கப்படாதது இதற்குக் காரணமாகும்.

(இ) <u>வாகனத் தரிப்பிடக் கட்டணம்</u>

2008 ஆம் வருடம் விதிக்கப்பட்ட துணை விதியின் படி வாகனத் தரிப்பிட கட்டணம் அறவிடப்பட்டிருக்காததுடன், முச்சக்கர வண்டித் தரிப்பிடக் கட்டணம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. ஒழுங்கான முறையில் தரிப்பிடம் மற்றும் பதிவு செய்யப்பட்ட வாகனம் மட்டும் கணிப்பிட்டு கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளாதது பெற்றுக் கொள்ள வேண்டியிருந்த வருமானம் சபைக்குக் கிடைத்திருக்கவில்லை.

(ஈ) அறிவித்தல் பதாகை வருமானம்

சபையினால் 2016 ஜுன் மாதம் செய்யப்பட்ட ஆய்வு சபை அதிகார எல்லையினுல் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது என கண்டறியப்பட்ட 54 நிரந்தர விளம்பர அறிவித்தல்கள் தொடர்பாக அறவிட வேண்டிய ரூபா. 189,000 வினை 2017 ஏப்ரல் 18 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.3.6 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

2016 திசம்பர் 31 ஆம் திகதியிற்கு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பண வருமானம் ரூபா. 5,776,338 மற்றும் முத்தரைக் கட்டணம் ரூபா. 17,846,554 ஆகும்.

3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயற்திறன்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது.

(அ) 2015 பெப்ரவரி 06 ஆம் திகதி கைச் சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் படி துல்கிரிய கிராம சேவைப் பிரிவு மொன்ரோவியாவத்த காணியில் நிலத்தினை வெட்டி போக்குவரத்து செய்யும் போது பிரதேச சபை பாதை ஒன்றான நெலும்பொக்குனுகம பாதைக்கு ஏற்பட்ட பாதிப்பினை மறுசீரமைக்க ஒப்புக் கொண்டிருந்தும் சபையின் தொழில்நுட்ப அதிகாரியினால் 2016 ஆகஸ்ட் 31 ஆம் திகதி தயாரிக்கப்பட்ட ரூபா. 1,300,000 மதிப்பீட்டின் பிரகாரம் பாதை மறுசீரமைக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற் கொண்டிருக்கவில்லை.

(ஆ) மத்திய அரசாங்ம் மற்றும் மாகாண சபை மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா.10,700,301 வான 26 வேலைகள் 2016 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையினால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா. 2,100,000 வான 7 வேலைகள் மீளாய்வாண்டில் செய்யப்பட்டிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது.

(அ) சபையினால் செயற்படுத்தப்படுகின்ற மாகேன நீர் விநியோகத் திட்டத்தில் 29 வாடிக்கையாளர்கள் 03 மாதம் முதல் 09 மாதம் வரையிலான காலப்பகுதிக்குரிய ரூபா. 62,893 நீர்க் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரிகளின் கவனக் குறைவின் காரணமாக மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூபா. 11,410 ஊழியர் சேமலாப அபரிமிதம் அதற்கு பொறுப்பான அதிகாரிகளிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை மேற் கொண்டிருக்கவில்லை.

(இ) 2015 ஆம் வருடம் ரூபா. 183,370 நல்ல வருமானம் பெற்ற 05 மயான பூமி தொடர்பாக மீளாய்வாண்டில் ரூபா. 117,000 வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் எந்தவித வருமானமும் கிடைத்திருக்கவில்லை. அம் மயான பூமியில் இருக்கும் தென்னை, இரப்பர் பயிர்ச் செய்கை சரியான முறையில் பராமரிக்கப்படவில்லை மற்றும் பாதுகாப்பு இல்லாததனால் பயிர்ச் செய்கை அழிக்கப்பட்டிருப்பதும் அவதானிக்கப்பட்டது.

3.3 <u>தின்மக் கழிவு முகாமைத்துவம்</u>

சபைக்குரிய அம்பேபுஸ்ஸவில் அமைந்திருக்கும் கழிவு மீள் சூழற்சி செய்யும் இடம் 2013 வருடத்திலிருந்து கொம்போஸ்ட் உற்பத்தி செய்வதுடன் துங்தொட்டவில் அமைந்திருக்கும் 2 ஏக்கர் அளவிலான இடத்தில் கொம்போஸ்ட் திட்டத்தின் மிகுதியாகும் தின்மக் கழிவு மற்றும் சூழவுள்ள சேகரிக்கப்படும் குப்பை குழங்கள் குழியினுல் இடவோ அல்லது பரப்பி மண் போடவோ ஏற்பாடு செய்திருக்கவில்லை.

4. <u>கணக்களிப்பொறுப்பும் நல்லாளுயையும்</u>

4.1 <u>பாதீட்டுக் கட்டுப்பாடு</u>

(அ) மீளாய்வாண்டிற்காக சமர்பிக்கப்பட்ட பாதீட்டில் ஒதுக்கிடு செய்யப்பட்ட செலவு விடயங்கள் 38 தொடர்பாக மொத்தம் ரூபா. 4,760,000 நிதி ஒதிக்கீடு நூற்றுக்கு 100 வீதமும், செலவு விடயங்கள் 26 தொடர்பாக ரூபா. 5,817,398 நிதி ஒதிக்கீடு நூற்றுக்கு 50 இருந்து 99 வரை பயன்படுத்தப்பட்டிருக்கலில்லை.

(ஆ) 19 செலவு விடயங்கள் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டினை விட ரூபா. 9,578,136 அதிகமாக செலவு செய்யப்பட்டிருந்தது.

4.2 <u>உள்ளகக் கணக்காய்வு</u>

1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதிக் கோவையின் 5(7) இன் பிரகாரம் நிதி மற்றும் கயஞ்சியம் தொடர்பாக போதிய உள்ளக கணக்காய்வை நடாத்திச் செல்லப்பட்டிருக்கவில்லை.

5. <u>முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்</u>

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| <u>முறைமை</u> | <u>அவதானிக்க வேண்டிய விடயம்</u> |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) கொம்போஸ்ட் இருப்பு, வேலை தொடர்பாக மூலதன பெறுகை மற்றும் செலவு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.<br>(ii) கணக்கு மற்றும் அதற்குரிய உபஅட்டவணைகளுடன் இனங்கவில்லை. |
| (ஆ) உள்ளகக் கட்டுப்பாடும் பரிசோதனையும் | போதுமான உள்ளக கணக்காய்வு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (இ) நிலுவை வருமானம் | மதிப்பீட்டு வரி, நீதிமன்ற தண்டப் பணம், முத்திரைக் கட்டணம் அறிவித்தல் பதாகைக் கட்டணம் அறவிட வேண்டிய நிலுவைகள் காணப்பட்டது. |
| (ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு | நூற்றுக்கு 100 வீதம் மிகுதி மற்றும் ஒதுக்கீட்டினை விட அதிமாக செய்யப்பட்டிருந்தது. |